

PDF
GET FREE
PDF
தமிழகத்தின் முதல்
இ-பட்ஜெட்
2021-22
TAMILNADU
DIGITAL BUDGET 2021




# தமிழ்நாட்டின்
# 2021-2022 ஆண்டுக்கான
# நிதிநிலை அறிக்கை




- 13 ஆகஸ்ட் 2021, தமிழ்நாட்டிற்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியில் தாக்கல் செய்யப்படும் முதல் நிதிநிலை அறிக்கை இதுவாகும்.
- தமிழக சட்டப்பேரவையில் பட்ஜெட் கூட்டத் தொடர் சட்டபேரவை தலைவர் அப்பாவு தலைமையில் தொடங்கியது.




- தமிழக சட்டப்பேரவை வரலாற்றில் முதல் முறையாக காகிதமில்லாத நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.
- கலைவாணர் அரங்கில் நடைபெற்று வரும் 2021-2022ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தமிழக நிதியமைச்சர் பி. டி. ஆர். பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்தார்.




- “ இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
  வகுத்தலும் வல்லது அரசு ”
- என்ற திருக்குறளை மேற்கோள்காட்டி நிதிநிலை உரையை பழனிவேல் தியாகராஜன் தொடங்கினார்.
- மேலும் நிதியாண்டின் எஞ்சிய 6 மாத காலத்துக்கு மட்டுமே இந்த நிதிநிலை அறிக்கை பொருந்தும்.




**திட்டங்கள்:**

- " உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்" கீழ் மொத்தம் பெறப்பட்ட மனுக்களில் இதுவரை 2,29,216 மனுக்கள் தீர்வு காணப்பட்டுள்ளது.




## கருணாநிதி செம்மொழி விருது:

- ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 3ஆம் தேதி கருணாநிதி செம்மொழி தமிழ் விருதும் ரூ. 10 லட்சம் பரிசுத் தொகையும் வழங்கப்படும்.




- செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்டத்தின் கீழ் தமிழ் படைப்புகள் மொழி பெயர்க்கப்படும்.
- பொது நிலங்களை முறையாகப் பயன்படுத்த அரசு நில மேலாண்மை அமைப்பு அமைக்கப்படும்.




## தொல்லியல் ஆய்வுகளுக்கான ஒதுக்கீடு:

- தமிழகத்தில் நடைபெற்று வரும் தொல்லியல் ஆய்வுகளை அறிவியல் முறையில் மேற்கொள்ள இந்த ஆண்டில், ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.
- கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்படும்.




## தொல்லியல் ஆய்வுகளுக்கான ஒதுக்கீடு:

- அரியலூர் -பெரம்பலூர் மாவட்டங்களில் ரூ. 10 கோடியில் புவியியல் புதைவடிவ பூங்கா அமைக்கப்படும்.
- 6 கோடி வருடங்களுக்கு முந்தைய உள்நாட்டு புதை படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் புதைபடிவ பூங்கா அமைக்கப்படும்.




## நீர்நிலை புனரமைப்பு:

- மொத்தமாக பாசனத் திட்டத்திற்காக ரூ. 6,607 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- தமிழகத்தில் புதிதாக 6 இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படும்.




# சென்னைக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் முக்கிய திட்டங்கள்:

- சிங்கார சென்னை 2.0 திட்டம் தொடங்கப்படும்.
- சென்னை மாநகரத்தில், பொது இடங்களில் சுவரொட்டிகள் இல்லாத நகரமாக சென்னை மாற்றப்படும்.




# நகர்ப்பற மேம்பாடு தொடர்பான முக்கிய அறிவிப்புகள்

- புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டம்

  -- ரூ. 1200 கோடி

- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்

  -- ரூ. 1000 கோடி




# நகர்ப்பற மேம்பாடு தொடர்பான முக்கிய அறிவிப்புகள்

- புரட்சித் தலைவர் எம்ஜிஆர் மதிய உணவு திட்டம்

  -- ரூ. 1725 கோடி

- 3-ம் பாலித்தனவர் ஓய்வூதிய திட்டம்

  -- ரூ. 1.5 கோடி




# போக்குவரத்து துறை

- மகளிர், மாற்றுத் திறனாளிகள், 3-ம் பாலினத்தவர் இலவச பயணத்திற்கு மானியமாக ரூ. 703 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகள் ஒரு உதவியாளருடன் அரசு பேருந்துகளில் இலவச பயணம் செய்ய அனுமதி.




# போக்குவரத்து துறை

- மதுரையில் மெட்ரோ ரயில் சேவையை தொடங்க ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.
- நகரங்களில் 30 மீட்டர் இடைவெளியில் மின் கம்பங்கள் அமைக்கப்படும்.
- தமிழகத்தில்தான் அதிக அளவிலான தார் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.




## மகப்பேறு கால விடுப்பு அதிகரிப்பு

- மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தப்படும்.
- இல்லத்தரசிகளுக்கு மாதந்தோறும் ரூ. 1000 உரிமைத் தொகை வழங்கும் திட்டம்




## பெட்ரோல் மீதான வரி

- பெட்ரோல் மீதான வரியில் லிட்டருக்கு ரூ. 3 குறைக்க தமிழக முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.




# மாவட்ட மேம்பாடு




- திருவள்ளூர் மாவட்டம் மாநல்லூரில் மின்வாகனப் பூங்கா அமைக்கப்படும்.
- சென்னை நந்தம்பாக்கத்தில் "நிதிநுட்ப நகரம்" ரூ. 165 கோடியில் அமைக்கப்படும்.
- தூத்துக்குடியில் ரூ. 4,500 கோடியில் சர்வதேச அறைக்கலன் தயாரிப்பு பூங்கா அமைக்கப்படும்.




- ஒசூரில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்படும்.
- தூத்துக்குடியில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் அமல்படுத்தப்படும்.
- ரூ. 225 கோடியில் கோவையில் 500 ஏக்கரில் ராணுவ தளவாட உற்பத்தி பூங்கா அமைக்கப்படும்.
- பனப்பாக்கத்தில் தோல் பொருட்கள் உற்பத்தி பூங்காக்கள் அமைக்கப்படும்.




## தமிழகத்தில் 5 இடங்களில் டைடல் பூங்காங்கள் அமைக்கப்படும்.

### அதன்படி தமிழகத்தில்

- விழுப்புரம்
- திருச்சிற்றம்பலம்
- வேலூர்
- திருப்பூர்
- தூத்துக்குடியில்




## தமிழகத்தில் புதியதாக சிப்காட் தொழிற்பேட்டைகள்

“ திருவண்ணாமலை, நெல்லை, விருதுநகர், நாமக்கல், தேனி, சிவகங்கை, விழுப்புரம், நாகையில்” புதியதாக சிப்காட் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும்.




## பள்ளிக்கல்வித் துறை

- 8 வயதுக்குள்பட்ட மாணவர்களுக்கு அடிப்படை கல்வியறிவு, கணித அறிவை பெற உறுதி செய்யும் பொருட்டு "எண்ணும் எழுத்தும் இயக்கம்" கொண்டு வரப்படும்.
- தனித்துவமான மாநில கல்விக்கொள்ளையை வகுக்க கல்வியாளர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு அமைக்கப்படும்.




- பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலம் ஒரு புதிய சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டு சித்தர்களின் அறிவாற்றலுடைய தொன்மைவாய்ந்த மருத்துவ முறையான சித்தமருத்துவம் மேம்படுத்தப்படும்.
- துணிநூல் துறைக்கு தனி இயக்குநரகம் உருவாக்கப்படும்.




- தலைமைச்செயலகம் முதல் அனைத்து அரசுத் துறை அலுவலகங்கள் வரை தமிழை ஆட்சிமொழியாக பயன்படுத்துவது வலுப்படுத்தப்படும்.
- தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டத்தை 150 நாட்களாக உயர்த்தவும் தினசரி ஊதியம் ரூ. 273 ரூபாயிலிருந்து ரூ. 300 வழங்கவும் இந்த நிதிநிலை அறிக்கை மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளது.




# நன்றி..!

